# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

# O.S. No.76/2021

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 04 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**<u>நாள் : 04.03.2026</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பாலாஜி (PW–1 ) | வயது | : | 43/2025 |
| க/த பெயர் | : | திரு. பிச்சை | தொழில் | : | அரசு ஊழியர் |
| முகவரி | | சென்னை | வட்டம் | : | சென்னை |

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி ;–</u>**

| வ. எண். | தேதி | ஆவணங்கள் | குறிப்பு | குறியீடு விவரம் |
|---|---|---|---|---|
| 1 | 28.03.2012 | வாதிக்கு இறந்த தமிழரசன் எழுதிக்கொடுத்த பாக பாத்திய விடுதலை பத்திரம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.5 |

எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ளவாறும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்குமாறு பிராத்திக்கிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

1. இந்த வழக்கை எனது அம்மா கலைச்செல்வி தாக்கல் செய்தார் என்றால் சரிதான். எனது அம்மா கலைச்செல்வி எப்போது இறந்தார் என்றால் 30.03.2022ல் இறந்தார். எனது அம்மாவின் வாரிசுதாரர் என்ற முறையில் 2 முதல் 4 வாதிகள் இந்த வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். என்ன பரிகாரம் வேண்டி எனது அம்மா வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது அம்மாவின் அண்ணான தமிழரசனின் சட்டப்படி வாரிசுதாரர் எனது அம்மா என்று பரிகாரம் வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**2.** தமிழரசனுக்க திருமணம் ஆகிவிட்டதால் என்றால் ஜெயமணி என்பவருடன் திருமணம் ஆகி விவாகரத்து ஏற்பட்டு தற்போது இறந்துவிட்டார். தமிழரசன், ஜெயமணிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் குழந்தைகள் இல்லை. தமிழரசன் அப்பா, அம்மா தற்போது எங்கு உள்ளார்கள் என்றால் அவர்கள் 1990ல்

இறந்துவிட்டார். தமிழரசனின் உடன் பிறந்த சகோதரி கலைச்செல்வி என்பதற்கான எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யாத இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

District Munsif,
Mannargudi.

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 18:32:13 +0530